KANTON LUZERN
Bildungs- und Kulturdepartement

Dienststelle Volksschulbildung

Tamilisch

# Logopädie in der Schule
## பாடசாலையில் மொழிப்பயிற்சி

மொழிப்பயிற்சியானது அரசினர் பாடசாலையின் ஒரு சேவை வாய்ப்பாகும். பெற்றோர், பிள்ளைகள், இளைஞர்கள், ஆசிரியர்கள், பாடசாலைத்தலைமையாசிரியர்கள், நிர்வாகப்பணிமனை அங்கத்தவர்கள் அனைவரும் இதன் சேவையைச் செலவில்லாமல் பெற முடியும்.

மனிதராகிய நமக்கு மொழி அர்த்தமுள்ள மையமாகும். மொழியின் உதவியுடன் நாம் எம்மை வெளிப்படுத்தவும், எம்முடன் வாழ்பவர்களை விளங்கிக் கொள்ளவும் முடிகின்றது. ஒவ்வொரு மொழிச்செயற்பாட்டின்போதும் உயிர், உடல், உள நிகழ்வுகள் பங்குபற்றுகின்றன. அனைத்து மனிதர்களும் மொழியைப் பேசும்போது அதற்கான ஆலோசனையை எப்போதும் இவ்வாறுதான் எதிர்கொள்கின்றார்கள். அவை மனிதனது உளவியல், சமுக நலனிலும் அதுபோல் கற்றல் திறனிலும் வேண்டத்தகாத விளைவை-யும் ஏற்படுத்தலாம்.

ஒரு பிள்ளையின் சாதாரண மொழி விருத்தியானது, அதனது புலன்களால் உணரும், சிந்திக்கும், அசையும் தன்மைகளிலும், அதேபோல மனஉணர்வு, சமுக நடத்தைகளிலும் தங்கியிருக்கும். அதனால், ஒரு மொழிப்பயிற்சிப் பதிவும் சிகிச்சையும் சொல்லத்தக்க விருத்தியைத் தன்னகத்தே உள்ளடக்குகின்றது.

பிள்ளையின் தனிப்பட்ட தேவை, ஒவ்வொரு பயிற்சியையும் நிர்ணயிக்கின்றது. புதிய அனுபவங்களைச் சேகரிப்பதுடன் மொழியைக் கண்டுபிடிக்கக் கூடியதாக, விளையாட்டுடன் கையாளக்கூடியவாறு பிள்ளை நெறிப்படுத்தப்படும். இவ்வாறு அது தனது மொழியறிவை விரிவுபடுத்துவதுடன், அடுத்த விருத்திக்கட்டத்துக்கு நெறிப்படுத்தப்படுகின்றது.

தேவையேற்பட்டால் – எதிர்காலத்தில் வாசிப்பு, எழுத்து, கணக்கு என்பவற்றில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தடுக்கக்கூடிய - தடுப்புப் பயிற்சிகளை, சிறுபிள்ளைப் பராயத்திலேயே செய்ய வேண்டும். தனிமனிதஆளுமைவிருத்தி, நடத்தை என்பவற்றில் தடங்கல்கள் ஏற்படும்போது, அது தடுக்கப்பட வேண்டும் அதாவது அது குறைக்கப்பட வேண்டும். வெற்றியளிக்கக்கூடிய சிகிச்சைக்கான மேலதிக காரணி, பெற்றோரினதும் ஆசிரியரதும் ஆலோசனை, ஆதரவு வடிவிலான இணைந்த வேலை-யாகும்.

பேச்சுப்பயிற்சியாளர்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட துறைசார்உயர்கல்லூரிகளில் முழுநேரப்பட்டப்படிப்பை கற்று முடித்தவர்களாவர். இவர்களது பட்டப்படிப்பு நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டது.

சித்திரை 2010